6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

8. (i) *1–10–2006* ஆம் நாளன்று முதல் *2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டம் (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) (தமிழ்நாடு சட்டம் *27/2006*) செயலுக்கு வரும் என அறிவித்தும் (ii) துணை வணிக வரிகள் ஆணையாளரை பதவி பெயர் கொண்ட அதிகாரியாக நியமித்து, அவர் துணை வணிக வரிகள் ஆணையாளர் என்கிற வகையில் அதிகாரம் செலுத்தும் அதிகார வரம்புப் பகுதியில் அவருடைய அதிகாரத்தை செலுத்துவார் என அறிவித்தும் மற்றும் (iii) வணிக வரிகள் ஆணையாளரை அதிகாரம் பெற்ற அலுவலராக நியமித்தது குறித்தும், *27–9–2006* ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் *115* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [*2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தின் (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) (தமிழ்நாடு சட்டம் *27/2006*) *15* *(3)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

9. *2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) விதிகள் இயற்றியது குறித்து *27–9–2006* ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் *116* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [*2006* ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரிச் சட்டத்தின் (நிலுவைகளைத் தீர்வு செய்தல்) (தமிழ்நாடு சட்டம் *27/2006*) *15* *(3)* பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

(ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

27. *2005–2006* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்தின் ஆண்டறிக்கை. (தமிழ், ஆங்கிலம்)

28. பொதுக் கணக்குக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. *(2006–2007)*

29. பொதுக் கணக்குக் குழுவின் இருபதாவது அறிக்கை. *(2006–2007)*

30. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தொன்றாவது அறிக்கை. *(2006–2007)*